நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# சுதந்திரப் பொருளாதாரத்தில் அடிமையாகும் இந்தியா

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 13 Dec 2011 03:00:58 AM IST

வளர்ச்சி' "வளர்ச்சி' என்று மூச்சுக்கு மூச்சு கூட்டத்தில் கூடிநின்று கூறும் மன்மோகன் சிங்கும், மதிப்புக்குரிய பிரதமரின் கூட்டாளி அமைச்சர்களும், காங்கிரஸ் கட்சி கனவான்களும், இந்தியாவை ஒட்டுமொத்தமாக ஒபாமாவுக்கு - அதாவது அமெரிக்காவுக்கே விற்றுவிட முடிவு செய்துள்ளதாகத் தோன்றுகிறது.

பி.ட்டி விதைகளுக்காகவும் வேறுபல உயிரித் தொழில்நுட்பங்களுக்காகவும் விவசாயத்தை அடகு வைத்தார்கள். அடகு வைத்தால் மீட்கும் வழி தேடலாம். இப்போது விற்பனை தொடங்கப் போகிறது. இந்தியாவில் ""சில்லறை விற்பனை" செய்ய அன்னிய மூலதனத்துக்கு அனுமதி வழங்கப் போகிறார்கள்.

ஆரம்பத்தில் 51 சதம். வால்மார்ட், ஜெனரல் மில், கார்கில் எல்லாம் நுழைந்து இந்திய விவசாயிகளைக் காப்பாற்றப் போகிறார்கள். இப்படித்தான் நம்மை மன்மோகன் சமாதானப்படுத்துகிறார். இந்தியாவுக்கு டாலர் முதலீடு வேண்டும்.

கடந்த மூன்றாண்டுகளாக இந்தியாவில் நிகழ்ந்துவந்த பொருளாதார நெருக்கடிகள், அப்படிப்பட்ட பல நெருக்கடிகளுக்கு மத்திய அரசு வழங்கிய சில தீர்வுகள், அப்படி வழங்கப்பட்ட தீர்வுகள் எதுவுமே வேலை செய்யாததால் சரி, ""கூப்பிடு வால்மார்ட்டை. போடு கடைகளை, நடத்துங்க ராஜா" என்று உத்தரவு போட்டது சோனியாவா? மன்மோகனா? என்றெல்லாம் ஆராய்வதில் என்ன பயன்?

ஆளும் கூட்டணியின் மெஜாரிட்டி பலம் நிகழ்த்தும் பொம்மலாட்டத்தில் கைதூக்கி, இந்தியர்களை அடிமையாக்கும் எம்.பி.க்களை வாழ்த்துவோம். இந்தியச் சில்லறை வர்த்தகத்தில் 51 சதவிகித அனுமதிக்குரிய சட்டம் நிறைவேறப்போவதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம். இப்போதைக்கு ஒத்திவைப்பது ஒரு கண் துடைப்பு.

கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவில் விலைவாசி நோய் விஷம்போல் ஏறிக்கொண்டுள்ளது. நடுத்தர மக்களும் அடித்தட்டு மக்களும் விலை ஏற்றத்தால் செலவைச் சமாளிக்க முடியாமல் கடன் வாங்குவதும் வட்டி கட்டுவதும் வாடிக்கையானது.

விலைவாசி ஏறுவது ஏன் என்றால் பணவீக்கம் என்றார்கள். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டியை உயர்த்த வேண்டும் என்று சில நிபுணர்கள் கூறினர். வட்டியை உயர்த்தினால் ரூபாய் முதலீடு பிரச்னையாகும். ஆகவே, வட்டியை உயர்த்தக் கூடாது என்று சில நிபுணர்கள் கூறினர். எனினும் ரெப்போ வட்டியைப் பலமுறை உயர்த்தினார்கள்.

ஒவ்வொரு முறையும், அதாவது காலாண்டுக்கு ஒரு தடவை அரைக்கால், கால், அரை, முக்கால், ஒன்று என்று உயர்த்தும்போது இதனால் உற்பத்திக்குப் பங்கம் வராது, முதலீடு பிரச்னை ஆகாது என்று ரிசர்வ் வங்கி கவர்னர் கூறுவதுண்டு. ஆனால், வட்டியை உயர்த்தியதால் ரூபாய் முதலீடு குறைந்து வளர்ச்சி குறைந்துவிட்டதாக சமீபத்தில் பிரணாப் முகர்ஜி ஒப்புக்கொண்டுள்ளதன் பொருள் இப்போது புரிகிறது.

வளர்ச்சிக்கு டாலர் முதலீடு தேவை என்ற எண்ணத்தில் வட்டி உயர்த்தப்பட்டதா? உண்மையில் வட்டி உயர்ந்ததால் பணவீக்கம் குறைந்ததா? இல்லையே. உண்மை புரிந்தது.

வளர்ச்சிக்காக நாட்டையே அடகு வைக்கும் மதியூகிகள் குளோபலிசேஷன் என்ற மாயவலைக்குள் சிக்கி ஏற்றுமதி செய்து பணம் திரட்டலாம் என்றனர். அப்படி வரக்கூடிய பணத்தால் உள்ளூரில் உற்பத்தியை உயர்த்தலாம் என்று கருதி, ஏற்றுமதியாளர்களின் நன்மைக்காகப் பணமதிப்பைக் குறைத்தனர்.

பணமதிப்பைக் குறைப்பதன் மறுபெயர் பணவீக்கம். இன்று ரூபாயின் மதிப்பு குறைந்துவிட்டது. இன்னும் குறையத்தான் போகிறது. பணம் வீங்கத்தான் போகிறது.

கடந்த ஆண்டு 47 - 48 ரூபாய்க்கு விற்ற டாலர் இன்று ரூ. 54-க்கு உயர்ந்துள்ளது. அடுத்த ஆண்டு ரூ. 63 - 64 ரூபாய்வரை உயரும். ரூபாயின் மதிப்பைக் குறைத்தால் ஏற்றுமதிக்குரிய பொருள் அளவும் கூடும்.

இப்படிப் பணமதிப்பைக் குறைக்கும்போது டாலர் முதலீட்டாளர்களுக்கு அதிக லாபம் இருக்கும். உள்ளூர் விலைவாசியை ஒருக்காலும் கட்டுப்படுத்த இயலாது.

ஒரு குறிப்பிட்ட பொருளை மலிவாக ஏற்றுமதி செய்து பெறக்கூடிய லாபத்தை வைத்து அப்பொருள் உற்பத்தியை உயர்த்தியதாகவோ, அடக்க விலை குறைந்ததாகவோ இந்திய வரலாறு இல்லை. ஏற்றுமதி மூலம் பெறும் டாலர் அதிக விலையில் இறக்குமதிக்கு உதவுகிறது. ஏற்றுமதி மதிப்பைவிட எப்போதுமே இறக்குமதி மதிப்பு கூடுவதால் அன்னியச் செலாவணிப் பற்றாக்குறையும் நீடித்தவண்ணம் உள்ளது.

உள்ளூர் உற்பத்தி உயரப் போதிய மூலதனம் இல்லாததால் அரசுக்கடன் பத்திரங்களை விற்க வேண்டியுள்ளது. இதனால் பொது மூலதனம் உயரும். சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவில் வாராத கடன் கருதி அமெரிக்க ராஜமுத்திரைக் கடன் பத்திரங்களை "மூடி' இன்வெஸ்ட்மென்ட் ஏஏஏ+ என்ற நம்பும் நிலையை ஏஏ+ என்று குறைத்தபோது, இந்தியாவில் ஏகப்பட்ட சர்ச்சை. அமெரிக்காவே குடிமுழுகிவிட்டதாக ஊடகங்களும் மிகைப்படுத்தின.

அண்மையில் அதே "மூடி' இன்வெஸ்டர் ஸ்டேட் வங்கியின் வாராத கடன் அளவு இன்னமும் மோசம் என்று அளந்து ஏ+ ஐக்கூட வழங்கவில்லை. ""இந்திய ரூபாய் வலுவாக உள்ளது. எந்தப் பயமும் வேண்டாம்" என்று அலறிய வங்கி உயர்நிலை அதிகாரிகள் அன்று அமெரிக்கக் கடன் பத்திரங்கள் மதிப்பிழந்து விட்டதாக "மூடி' மதிப்பிட்டதை ஏற்றார்கள். அதே கருத்தை "மூடி', ஸ்டேட் வங்கிக்கு வழங்கியபோது மறுத்தார்கள்.

விலைவாசி உயர்வதைக் கட்டுப்படுத்தப் பணவீக்கத்தைக் குறைக்க வேண்டும். பணவீக்கத்தைக் குறைக்க வட்டியை உயர்த்த வேண்டும். வட்டியை உயர்த்தினால் ரூபாய் முதலீடு குறைந்து உற்பத்தி குறையும்.

ஆகவே, உற்பத்தியை உயர்த்த 51 சதவிகித அன்னிய முதலீடு என்பது உற்பத்தி - மொத்த வியாபாரத் துறைகளில் குளோபலிசேஷன் அறிமுகமான காலகட்டத்திலேயே தொடங்கிவிட்டது.

உதாரணம்: சுரங்கத் தொழில், உயிரித் தொழில்நுட்பம், மின்சாரம், பொதுச் சேவையில் குடிநீர், வங்கித் தொழில், எஃகு, அலுமினியம், இயந்திரங்கள், கார், லாரி, பல்வேறு மின்சாரச் சாதனங்கள், குளிக்கும் சோப்பு வகையறா உள்பட, விதைகள்.

அப்போதெல்லாம் ""ஆமாம் சாமி" போட்ட எதிர்க்கட்சிகள், இப்போது சில்லறை வர்த்தகத்தில் 51 சத அன்னிய முதலீடு என்றதும் எதிர்ப்பானேன்?

குளோபலிசேஷன் - அதாவது உலக வர்த்தக அமைப்பின் சட்ட-திட்ட விதி ஒழுங்கு முறைகளில் (டங்கல் திட்டம்) இந்தியா கையெழுத்துப் போட்டபோது சில்லறை வர்த்தகத்தில் 51 சதம் விட்டுப்போனதால் இன்று சட்டமோ. யாருக்குத் தெரியும்?

சமையல் கூடத்தையே விட்டுக்கொடுத்து விட்டோம். பரிமாறுவதற்கு ஏன் தடை என்று பிரணாப் முகர்ஜி கேட்பது நியாயந்தானே? மம்தாவின் எதிர்ப்பு ஓயும்வரை ஒத்தி வைக்கலாம். அலைகள் ஓய்ந்தபின்னர் சட்டம் ஒப்புதலாகும் என்று சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

டிசம்பர் 4-ம் தேதி செய்தியில் சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீட்டை விவசாயிகள் ஆதரிப்பதாக மத்திய அமைச்சர்களும் மன்மோகனும் கூறினார்கள். மறுநாள் டி.வி.யில் ஆரஞ்சு டர்பனுடன் குர்தா - தோத்தி அணிந்த கூட்டம் தங்களை விவசாயிகள் என்று கூறிக்கொண்டு அன்னிய முதலீட்டைத் தாங்கள் ஆதரிப்பதாகப் பிரதமரிடம் தெரிவித்த காட்சி... நாடகத்தில் சிவாஜியே தோற்றுவிடுவார்! வெள்ளை வெளேரென்று உடை அணிந்த கிளீன் விவசாயிகளை பார்த்ததே இல்லை. இப்போது அரசுக்கு உணவு மானியம் மிகவும் சுமையாக உள்ளது.

விவசாயிகளுக்கு அதிக விலை கொடுத்து வாங்கி நுகர்வோர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கவா அன்னிய முதலீடு வருகிறது?

நஷ்டத்துக்கு வியாபாரம் செய்ய அவனுக்கென்ன பைத்தியமா? 1970-களில் விவசாயிகளுக்குக் கிடைக்கும் அங்காடி லாபம் பற்றி அமெரிக்காவில் ஆய்வு நடத்தப்பட்டது.

நுகர்வோர் வழங்கும் விலை 1 டாலர் என்றால் அதில் 70 சென்ட் விவசாயிகளின் பங்கு என்று அமெரிக்கப் புள்ளிவிவரம் கூறியது. பரவாயில்லை.

இன்னமும்கூட இந்தியாவில் விவசாயிக்கு நுகர்வோர் விலையில் சராசரி 50 முதல் 65 சதவிகிதமாவது இன்று கிட்டுகிறது.

சரக்கு - சில்லறை வர்த்தகத்தில் 51 சதவிகிதம் அன்னிய முதலீடு - அதாவது அமெரிக்காவில் நிகழ்ந்த அதே உணவுச்சங்கிலி வரும்போது பழைய இடைத்தரகர்கள் வேலை இழப்பார்கள்.

வால்மார்ட் - டெஸ்கோ - கார்கில் இடைத்தரகர்கள் சூட்டுக்கோட்டுப் போட்ட நவநாகரிகம் படைத்தவர்களாயிருப்பார்கள். தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் என்று அழைத்துக்கொண்டு விளைபொருள்களைக் கசக்கிப் பிழிந்து சோதிப்பார்கள். பின்னர் வழங்கப்படும் விலையைப் பார்த்து, ""நம்மூர் இடைத்தரகரே தேவலாம்'' என்ற முடிவுக்கு விவசாயிகள் வருவார்கள். உணவுச்சங்கிலி வால்மார்ட் கடை வந்தது. ""எல்லாம் கொள்ளை மலிவு'' என்ற விளம்பரத்துடன் தொடங்கும். மெல்ல மெல்ல பாரம்பரிய வணிகர்கள் போட்டி போட முடியாமல் அழிவர்.

இனி வாங்க ஆளில்லை என்ற நிலைக்கு வந்ததும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை குறைந்து, நஷ்டம் தாங்க முடியாமல் விவசாயிகள் நிலத்தை விற்ற பிறகு, கார்ப்பரேட்டு விவசாயம் சக்கை போடு போடும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

1947 ஆகஸ்டு 15-ல் நாம் பெற்ற சுதந்திரத்தை காந்தி ஒப்புக்கொள்ளவில்லை. இந்தியர்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெறவில்லை என்று கூறியதை, மன்மோகன் - சோனியா தவறாகப் புரிந்துகொண்டு குளோபலிசேஷன் என்ற சுதந்திரப் பொருளாதாரத்தையும், டாலர் மூலதனங்களையும் அள்ளிக்கொண்டு வந்துவிட்டார்கள். இந்தியப் பொருளாதாரத்தை நிமிர்த்த டாலர் சமபங்கில் வேண்டும்.

அப்படிப்பட்ட டாலர் சுதந்திரத்தில் அடிமையாகக் கட்டுண்டு வாழ்வதில் என்ன தவறு? 1947-க்கு முன் நாம் வாழ்ந்த வரலாறு புத்துருவம் பெற்றுத் திரும்புகிறது. மலர் தூவி வரவேற்பதா? கல்லை எறிவதா? முடிவு உங்கள் கையில்.

**பயிர் காப்பீட்டுத் திட்டம்: சம்பா நெல் விவசாயிகள் சேர 15-ம் தேதி கடைசி**

First Published : 13 Dec 2011 12:31:27 AM IST

சென்னை, டிச. 12: தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சம்பா நெல் பயிருக்கு கடன் பெறா விவசாயிகள் சேர டிசம்பர் 15 (வியாழக்கிழமை) கடைசி தேதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி:

சம்பா நெல் விவசாயிகள் தாங்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவு வங்கியிலோ, வர்த்தக வங்கியிலோ தேவையான பயிர் சாகுபடி ஆதாரங்களுடன் திட்டத்துக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய சாதாரண பிரீமியம் ரூ.75.

ஒரு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கூடுதல் பிரீமியம் ரூ.441.

பிற விவசாயிகள் செலுத்த வேண்டிய சாதாரண பிரீமியம் ரூ.83, கூடுதல் பிரீமியம் ரூ.490.

கடந்த ஆண்டு சம்பா நெற்பயிருக்கு தமிழகத்தில் ரூ. 200 கோடிக்கும் அதிகமான நஷ்ட ஈடு விரைவில் வழங்கப்பட உள்ளது.

**காய்கறிகள் விலையில் திடீர் சரிவு**

First Published : 12 Dec 2011 02:39:40 PM IST

காஞ்சிபுரம், டிச. 11: காஞ்சிபுரம் மற்றும் அதை ஒட்டியுள்ள பல்வேறு இடங்களில் காய்கறிகள் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் தக்காளி கிலோ ரூ.18-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒன்றரை கிலோ ரூ.15-க்கு விற்கப்படுகிறது.

காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள சந்தைப் பகுதியில் ஒன்றரை கிலோ தக்காளி ரூ.10-க்கு கூட விற்கப்பட்டன. இதேபோல் ரூ.18-க்கு விற்பனை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மார்க்கெட் பகுதியில் ரூ.15-க்கும், சந்தைப் பகுதியில் ரூ.10-க்கும் விற்கப்படுகின்றன.

வெங்காயம் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை கிடைக்கிறது. இந்த விலைக் குறைவு குறித்து வியாபாரிகளிடம் கேட்டபோது, "மார்க்கெட் பகுதிகளுக்கு காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளதாக' தெரிவித்தனர்.


தினமலர்
உண்மையின் உரைகல்

**சப்போட்டாவிற்கு போதிய விலை இல்லை :விவசாயிகள் கவலை**

டிசம்பர் 12,2011,10:48

ஆனைமலை : ஆனைமலை சுற்றுப்பகுதிகளில் சப்போட்டா அறுவடை தொடங்கியுள்ளது.

ஆனைமலை சுற்றுப்பகுதிகள் ஆழியாற்று பாசன விவசாயிகள் அதிக அளவில் தென்னை விவசாயம் செய்துள்ளனர். ஆனால் ஒரு சிலர் மட்டுமே சப்போட்டா விவசாயம் செய்துள்ளனர்.



ஆனைமலை ஒன்றியத்தில் மொத்தமாகவே சப்போட்டா விவசாயம் 10 ஏக்கர் அளவில் மட்டுமே உள்ளது. ஏக்கருக்கு 100 செடிகள் மூலம் 3 ஆயிரம் கிலோ வரை உற்பத்தி இருக்கும். பூப்பூக்க தொடங்கிய 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். விவசாயிகள் கூறியதாவது:
சப்போட்டா பழங்களுக்கு நல்ல விலை கிடைக்காததால் அதிக அளவில் பயிரிடுவதில்லை. சப்போட்டா செடிகளுக்கு பயிரிட எந்தவித மானியமும் கிடைப்பதில்லை. தோட்டத்திற்குள் வந்து கிலோவிற்கு 8 ரூபாய் கொடுத்து வியாபாரிகள் வாங்கிச்செல்கின்றனர். இந்த விலை கட்டுப்படி ஆவதில்லை என்றனர்.

**விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2011,05:11 IST

கருத்தை பதிவு செய்ய

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த மூலக்கரை பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் பயிர் சாகுபடி மேலாண்மை தொழில் நுட்ப கருத்தரங்கம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் சுசிலாதேவி தலைமையில் நடந்தது.
விவசாய உதவி இயக்குனர் மணிகண்டனர் வரவேற்றார். பஞ்சாயத்து யூனியன் துணைத்தலைவர் ஜெயபால், யூனியன் கவுன்சிலர் முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை வேளாண் விவசாய அலுவலர்கள் விஜயகுமார், மணிகண்டபிரசன்னா ஆகியோர் தொழில் நுட்பம் குறித்து பேசினர்.
வேதாரண்யம் கோட்ட உதவி விவசாய அலுவலர்கள் ரவி, எழிலரசி, சுப்பிரமணியன், வீரசுதாகர் ஆகியோர் கருத்து காட்சி அமைத்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.
விவசாயிகளுக்கு பயிற்சியுடன் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் விவசாய இடுப்பொருள்கள் வழங்கப்பட்டது. இதில், பஞ்சாயத்து தலைவர் கலைவாணி, துணை தலைவர் மாதவன், வார்டு

கவுன்சிலர்கள், முன்னோடி விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.
கரியாப்பட்டினம் உதவி விவசாய அலுவலர் வேதரெத்தினம் நன்றி கூறினார்.

**காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் துறைக்கு ரூ.1.76 கோடி ஒதுக்கீடு : விவசாய மேம்பாட்டிற்காக நிதி**

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்தில், மூன்று உப வடிவப் பகுதிகளில், விவசாய மேம்பாட்டிற்காக, வேளாண்மைத்துறைக்கு, 1 கோடியே, 76 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெறவும், விவசாய உப தொழில்களை பெருக்கி, அதன்மூலம் விவசாயிகளின் வருவாயை பெருக்கவும், தமிழக அரசு 2007ம் ஆண்டு, உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தை துவக்கியது.

இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள ஆறுகளின் உப வடிவநிலப் பகுதிகளில், நீராதாரங்களை புனரமைத்து, நீர்வளத்தை பெருக்குதல், அதன்மூலம் கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல், நவீன தொழில்நுட்பங்கள் மூலம் முழுமையாகப் பயன்படுத்தி, விவசாய உற்பத்தியை பெருக்கி விளைச்சலை அதிகப்படுத்த முடிவு செய்யப்பட்டது. மாநிலம் முழுவதும், 63 உப வடிவநிலப் பகுதிகளில், 2 ஆயிரத்து, 547 கோடி ரூபாய் மதிப்பில், திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வேளாண்மைத் துறைக்கு, 1.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு: கடந்த ஆண்டு, ஓங்கூர் ஆறு உப வடிவத்திட்டத்தில் அடங்கிய, காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த அச்சிறுப்பாக்கம், சித்தாமூர், லத்தூர் ஒன்றியப் பகுதிகளில், வேளாண்மைத்துறை, 41 லட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு பணிகளை மேற்கொண்டது. நடப்பாண்டு அடையாறு உப வடிவப்பகுதிக்குட்பட்ட, ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர், தாமஸ்மலை, காட்டாங்கொளத்தூர் ஒன்றியப்பகுதிகளில், வேளாண் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, வேளாண் துறைக்கு, 63 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூவம் உபவடிவப்பகுதியில் அடங்கிய, ஸ்ரீபெரும்புதூர், வாலாஜாபாத் ஒன்றியப் பகுதிகளில், திட்டத்தை செயல்படுத்த வேளாண் துறைக்கு, 33 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. செய்யாறு-கிளியாறு உபவடிவப்பகுதிக்குட்பட்ட, காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம், அச்சிறுபாக்கம், சித்தாமூர் ஆகிய ஒன்றியங்களில், வேளாண் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, வேளாண் துறைக்கு மட்டும் 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியில், சோதனை மற்றும் செயல் முறை விளக்கங்கள் மூலம், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிப்பது, நுண்ணூட்ட சத்துக்கள், வீரிய ஒட்டு ரக விதைகள், உயிரின உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற இடு பொருட்கள், வேளாண் கருவிகள் போன்றவற்றை விவசாயிகளுக்கு வழங்குதல், இயற்கை வழி வேளாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சிக்கட்டுப்பாட்டு நிர்வாகம் மூலம், வேளாண்மையில் நிலையான மேம்பாட்டை உருவாக்குதல், போன்ற பணிகளை வேளாண்மைத் துறை மேற்கொள்ள உள்ளது. இந்த ஆண்டு, ஒன்றிய, மாவட்ட அளவில், சிறந்த விவசாயிகளை தேர்ந்தெடுத்து பரிசு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**உளுந்து பயிரில் டி.ஏ.பி., உரம் தெளித்து அதிக மகசூல் பெறலாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2011,02:27 IST

திருவெண்ணெய்நல்லூர் : உளுந்து பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டுமானால் டி.ஏ.பி., தெளிக்க வேண்டும்.

இது குறித்து உதவி வேளாண் இயக்குனர் தேவநாதன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியதாவது:

உளுந்து பயிரில் அதிக மகசூல் எடுக்க வேண்டுமானால் அடியுரம் இடுவதுடன் கூடுதலாக இலை வழியே 2 சதம் டி.ஏ.பி உரத்தினை நீரில் கலந்து தெளித்தால் அதிக பலன் தரும். செலவு குறைந்த, எளிய தொழில்நுட்பமான இதனை இருமுறைகள் செய்ய வேண்டும்.

முதல்முறை உளுந்து விதைப்பு செய்த 25ம் நாள் அல்லது பூக்கும் தருணத்திலும், இரண்டாம் முறையாக, முதல்முறை தெளித்த 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கர் பயிருக்கு தெளிப்பு செய்ய தேவை யான 4 கிலோ டி.ஏ.பி., யினை தெளிப்பதற்கு முந்தைய நாள் 15 லிட்டர் நல்லநீரில் ஊறவைக்க வேண் டும். மறுநாள் ஊறவைத்த நீரின் தெளிவினை மட்டும் நன்றாக வடிகட்டி 185 லிட்டர் நல்லநீரில் கலந்து ஒரு டேங்க் தெளிக்க 2 மி.லி., டீபால் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். டி.ஏ.பி.,யின் அளவினை பரிந்துரைத்த அளவினைவிட அதிகமாக்கவோ, குறைக்கவோ கூடாது.

அளவை விட நீரினை அதிகமாக்கினால் செடிகள் மஞ்சளாகவும், குறைத் தால் செடிகள் எரிந்தது போலவும் ஆகிவிடும். கடும் வெயிலிலும், வயலில் போதுமான ஈரம் இல் லாமலும் தெளிக்கக்கூடாது. பூச்சி மற்றும் நோய் மருந்துகளுடன் இதனை தெளிக்கக் கூடாது.

பயிர்களுக்கு டி.ஏ.பி., தெளிப்பதால் செடிகளில் பூக்களின் எண்ணிக்கை அதிகரித்து பெரும்பான்மையான பூக்கள் பிஞ்சுகளாக மாறும். காய் பிடிப்பு அதிகமாகும். காய்களில் உள்ள பருப்புகள் அனைத்தும் நன்றாக முற்றுவதுடன், திறட்சியாகவும், அதிக புரதச்சத்துடனும், எடை

அதிகமாகவும் காணப்படும். இதனால் கூடுதல் மகசூல் மற்றும் அதிக வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.
திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில் ஒரு எக்டேர் உளுந்து பயிரிட்டுள்ள விவசாயிகள் 25 கிலோ டி.ஏ.பி.,யை 200 ரூபாய் மானியத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
இதற்கு விவசாயிகள் ஒரு எக்டேர் உளுந்து அல்லது பாசிப்பயிர் பயிரிட்டமைக்கான சான்றாக சிட்டா மற்றும் அடங்கலை அலுவலகத்தில் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம்.
குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைப் பதாலும், டி.ஏ.பி., மான்யத்தில் கிடைப்பதாலும் உளுந்து பயிரிட்டுள்ள விவ சாயிகள் அனைவரும் சரியான பருவத்தில் டி.ஏ.பி., தெளிப்பு மேற்கொள்ள வேண்டும். கூடுதல் விவரங்களை வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலர்களிடம் தெரிந்து கொள்ளலாம்.
இவ்வாறு உதவி வேளாண் இயக்குனர் தேவநாதன் தெரிவித்துள்ளார்.

**நத்தம் விவசாயிகளுக்கு மேலாண்மை பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2011,01:30 IST

திண்டுக்கல் : நத்தம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு கோசுக்குறிச்சியில் பொறியல்துறை மூலம் ஒரு வார கால பயிற்சி டிசம்பர் கடைசி வாரத்தில் நடக்கிறது. இதில், சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன முறை மூலமாக நீர் மேலாண் மை, நீர் சேமிப்பு முறைகள் குறித்து விளக்கப்படுகிறது. பண்ணை ஆட்கள் பற்றாக்குறையை போக்கிட தேவையான இயந்திரங்களின் செயல் விளக்கமுறைகளும், பல்வேறு துறை சார்ந்த வல்லுனர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். பயிற்சியில் பங்கேற்க நத்தம், அதனை சுற்றியுள்ள வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 20 விவசாயிகள் மட்டுமே பயிற்சியில் பங்கேற்க முடியும் என்பதால், தாழ்த்தப்பட்ட, பழங்குடி, உடல் ஊனமுற்ற, பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. பயிற்சி தொடர்பான விபரங்களுக்கு உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல்துறை, மீனாட்சி நாயக்கன்பட்டி, பாறைப்பட்டி போஸ்ட், திண்டுக்கல்-2 என்ற முகவரியில் தொடர்பு கொள் ளலாம், என, விவசாய இணை இயக்குனர்கணேசன் தெரிவித்துள்ளார்.

**விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2011,05:11 IST

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த மூலக்கரை பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் பயிர் சாகுபடி மேலாண்மை தொழில் நுட்ப கருத்தரங்கம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் சுசிலாதேவி தலைமையில் நடந்தது.
விவசாய உதவி இயக்குனர் மணிகண்டனர் வரவேற்றார். பஞ்சாயத்து யூனியன் துணைத்தலைவர் ஜெயபால், யூனியன் கவுன்சிலர் முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை வேளாண் விவசாய அலுவலர்கள் விஜயகுமார், மணிகண்டபிரசன்னா ஆகியோர் தொழில் நுட்பம் குறித்து பேசினர்.
வேதாரண்யம் கோட்ட உதவி விவசாய அலுவலர்கள் ரவி, எழிலரசி, சுப்பிரமணியன், வீரசுதாகர் ஆகியோர் கருத்து காட்சி அமைத்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.
விவசாயிகளுக்கு பயிற்சியுடன் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் விவசாய இடுப்பொருள்கள் வழங்கப்பட்டது. இதில், பஞ்சாயத்து தலைவர் கலைவாணி, துணை தலைவர் மாதவன், வார்டு கவுன்சிலர்கள், முன்னோடி விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.
கரியாப்பட்டினம் உதவி விவசாய அலுவலர் வேதரெத்தினம் நன்றி கூறினார்.

***நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கால்நடை உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் விவசாயிகளுக்கு கவர்னர் ரோசய்யா வேண்டுகோள்***

*சென்னை, டிச.13–*

*நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கால்நடை உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு கவர்னர் ரோசய்யா வேண்டுகோள் விடுத்தார்.*

*நிறைவு விழா*

*உலக கால்நடை மருத்துவ ஆண்டு கொண்டாட்டங்களின் நிறைவு விழா சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவ கல்லூரி அரங்கில் நேற்று நடந்தது. இதில் பல்கலைக்கழக வேந்தரும், தமிழக கவர்னருமான கே.ரோசய்யா கலந்து கொண்டு சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கு சான்றிதழ்கள் வழங்கினார். நிறைவுவிழா உரையாற்றிப் பேசும்போது கவர்னர் ரோசய்யா கூறியதாவது:–*

உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதுமட்டுமல்லாமல் கால்நடைகளின் எண்ணிக்கையில் 2–ம் இடத்தையும், முட்டை உற்பத்தியிலும் முன்னணியிலும் திகழ்கிறது. கால்நடை மற்றும் மீன்வளம் சம்பந்தப்பட்ட தொழில்களில் ஏறத்தாழ 2½ கோடி பேர் ஈடுபட்டு இருக்கிறார்கள். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) கால்நடை துறையின் பங்களிப்பு 8 சதவீதத்திற்கு மேல் உள்ளது.

விவசாயிகளுக்கு வேண்டுகோள்

விவசாயத்துறையில் நீடித்த வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்வதில் கால்நடை வளர்ப்பு தொழில் முக்கிய பங்காற்றுவதுடன் ஒருங்கிணைந்த பண்ணை முறையை மேம்படுத்தி வருகிறது. உலக கால்நடை மருத்துவ ஆண்டு கொண்டாட்டங்களை தொடர்ந்து, கால்நடை வளர்ப்பு துறையில் புதிது புதிதாக ஏராளமான தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகள் இத்தகைய நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கால்நடை உற்பத்தியை அதிகரிக்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். தற்போதைய உலக சூழலில் கால்நடைத்துறையில் வளர்ச்சியை தக்க வைத்துக்கொள்ள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறையில் இதர மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும் இவ்வாறு கவர்னர் ரோசய்யா கூறினார்.

கால்நடை துறைக்கு பொற்காலம்

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா பேசும்போது, ‘இதுவரை இல்லாத அளவுக்கு கால்நடை துறைக்கு தற்போது அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஏழைகளுக்கு இலவச கறவை மாடுகள், ஆடுகள், தஞ்சாவூர், நெல்லையில் புதிதாக கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஓசூரில் முட்டை மற்றும் கோழியின ஆராய்ச்சி மையம், 843 கால்நடை உதவி மருத்துவர்கள், 600 கால்நடை ஆய்வாளர்கள் உள்பட புதிதாக 2,863 பணியாளர்கள் நியமனம் என கால்நடை துறைக்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா வாரி வழங்கி உள்ளார். அவரது ஆட்சி கால்நடைத்துறைக்கு பொற்காலமாக இருக்கும்’’ என்று குறிப்பிட்டார்.

இந்தியாவில் முதன்மை மாநிலம்

பால்வளத்துறை அமைச்சர் வி.மூர்த்தி பேசுகையில், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் வண்ணம் முதல்–அமைச்சர் ஜெயலலிதா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றுவேன் என்ற அவரது கனவை நிறைவேற்ற கால்நடை மருத்துவ பட்டதாரிகள் செயல்பட வேண்டும்’’ என்று கேட்டுக்கொண்டார்.

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை செயலாளர் ககன்தீப்சிங்பேடி பேசும்போது, ‘தமிழக அரசு அறிமுகப்படுத்தி உள்ள ஏழைகளுக்கு இலவச கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம்’’ என்றார்.

தொழில்நுட்ப கண்காட்சி

முன்னதாக, பல்கலைக்கழக பதிவாளர் சி.பாலச்சந்திரன் வரவேற்றார். விழாவில், பேராசிரியர்கள், மாணவ– மாணவிகள், முன்னாள் துணைவேந்தர்கள், ஓய்வுபெற்ற பேராசிரியர்கள், விவசாயிகள், பண்ணை அதிபர்கள், விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். இறுதியில், வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி டீன் பி.முரளி நன்றி கூறினார். விழா தொடங்குவதற்கு முன்பாக, நவீனதொழில் நுட்பங்களை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை கவர்னர் ரோசய்யா தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.